வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
கும்மிடிப்பூண்டி

வழக்கு எண் : CC 17 /2021 காவல் நிலையம் ஆரம்பாக்கம் காவல் நிலையம்

வழக்கு சாட்சி : PW - 6

நாள் :03.01.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | ஜாதி | : | |
| தந்தை /கணவர் பெயர் | : | செங்கோடன் | தொழில் | : | மோட்டார் வாகன ஆய்வாளர் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | | 53 |

( எதிரி ஆஜர்இல்லை)

**முதல் விசாரணை**

நான் தற்போது விருதாச்சலம் மோட்டர் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.08.2018 ஆம் தேதி மதியம் 01.50 மணி அளவில் கும்மிடிப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணிபுரிந்தபோது ஆரம்பாக்கம் காவல்ஆய்வாளரின் வேண்டுதலின் படி குற்ற எண் 333/2018 சட்டப்பிரிவுகள் 279, 304(A) Ipc வழக்கில் சம்பந்தப்பட்ட இரணடு சக்கர இலகுரக வாகனமான பதிவு எண் TN 12 AX 6459 என்ற வாகனமானது மேற்படி அலுவலகத்தில் வைத்து மேற்படி அதே தேதியில் மதியம் 02.00 மணிக்கு ஆய்வு செய்தேன்.மேலும் மேற்படி வாகனத்துடன் அதற்கு உண்டான காப்பீட்டு நகல் மட்டும் என்னிடம் சமார்ப்பிக்கப்படவில்லை அனால் ஓட்டுனர் உரிமம் சமர்பிக்கப்பட்டது. மேலும் இவ்வாகனத்தில் சேதாரம் விவரங்கள
1. முன் பக்க head light, indicater சேதாரம் அடைந்து இருந்தது. 2. handle Bar, 3. Front Fork சேதாரம் அடைந்து இருந்தது. 4, Fuel Dabk சேதாரம் அடைந்து இருந்தது. 5, முன்பக்க இரண்டு பக்கத்தில் உள்ள Airs Cope சேதாரம் அடைந்து இருந்தது. 6. முன்பக்க சக்கரத்தில் சேதாரம் அடைந்து இருந்தது.. மேலும் வாகனமானது ஓட்டம் முடியாத நிலையில் இருந்தது. இவ்வாகன விபத்தானது இயந்திர கோளாறால் ஏற்படவில்லை என்று கருத்துதெரிவித்து அதற்கான சான்றிதழ் போலீசார் என்னை விசாரணை செய்தபோது கொடுத்தேன். அந்த சான்றிதழ் **அ.த.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல் மேற்கண்ட வழக்கில் சம்பந்தபட்ட மற்றொரு டிப்பர் லாரி TN 18 AU 2146 என்ற இரண்டு வாகனத்தை 10.08.2018 ந்தேதி மதியம் 02.00 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் என்னால் ஆய்வ செய்ய கொடுக்கப்பட்டு அதன்பேரில் மேறப்டி அதன்பேரில் மேற்படி மதியம் 02.10 மணிக்கு என்னால் மேற்படி வாகனமானது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அந்த ஆய்வின்போது மேற்கண்ட வாகனத்துடன் காப்பீட்டு நகல் சமர்பிக்கபடவில்லை. ஆனால்

ஓட்டுனர் உரிமம் சமர்பிக்கப்பட்டது. என்னுடைய ஆய்வில் கீழ்கண்ட சேதாரமானது மேற்கண்ட வாகனத்தில் காணப்பட்டது. 1. பின்பக்க வலதுபக்க பிரேக் லைட் சேதாரம் அடைந்து இருந்தது. கால்தடைதிறன் 70% ஆக இருந்தது. மேலும் வாகனம் இயங்க முடியாத நிலையில் இருந்தது. இவ்வாகன விபத்தானது இயந்திர கோளாறால் ஏற்படவில்லை என்று கருத்துதெரிவித்து அதற்கான சான்றிதழ் போலீசார் என்னை விசாரணை செய்தபோது கொடுத்தேன். அந்த சான்றிதழ் **அ.த.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

இரண்டு வாகனங்கள் 10 நாட்கள் காலதாமதமாக தேதியில் எனது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தீர்கள் என்றால் சரிதான். காலதாமத காரணத்தை எனது அறிக்கையிலும் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக இயந்திரகோளாறு சரிசெய்யகூடியது என்றால் சரிதான். இடைப்பட காலத்தில் வாகனத்தை சரிசெய்ய இயலும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு வாகனம் வேகமாக சென்று சென்டர் மிடியனில் மோதும்போது மேற்படி இரண்டு வாகனங்களிலும் ஏற்பட்டுள்ள சேதாரங்கள் ஏற்படும் என்றால் சரிதான். சம்பவ இடம் சென்று ஆய்வு செய்து இருந்தால் டயர் மார்க்கை வைத்து விபத்து எவ்வாறு ஏற்பட்டது எந்த வாகனத்தின் காரணமாக சொல்ல இயலும் என்றால் சரிதான்.